**புடவை பங்கீட்டுச் சபை**

**கலைப்பிற்கான நிதிக்கூற்றுக்கள் - 2012**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு புடவை பங்கீட்டுச் சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த கலைப்பிற்கான நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கமைய் உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 பாராளுமன்ற தீர்மான அங்கீகாரம் இன்றி புடவை பங்கீட்டுச் சபை கலைக்கப்பட்டமை

**1971 இன் 38 ஆம் இலக்க நிதிய அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனம் ஒன்று கலைக்கப்படுகையில் பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம் ஒன்றில் பெறப்பட்ட அதிகாரம் மற்றும் அதன் அங்கீகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் புடவை பங்கீட்டுச் சபை கலைக்கப்பட முன்னர் பாராளுமன்றத்தில் அத்தகைய தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டு அதன் மூலம் பெறப்பட்ட அதிகாரத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.**

#### 1.2.2 கலைத்தற் கணக்குகளைச் சமர்ப்பித்தல்

நிதி திட்டமிடல் அமைச்சின் பிரதிச் செயலாளரின் பீஈ/ஏடீபீ/02 ஆம் இலக்க 2012 சனவரி 05 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் சபையின் கலைத்தல் நடவடிக்கைகளை 2012 யூலை 10 ஆம் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படுவதற்காக கலைப்பாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்த போதிலும், கலைத்தல் நடவடிக்கைகள் பூர்த்திசெய்யப்பட்டு கணக்குகள் 2013 ஒக்டோபர் 25 ஆம் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய தொகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2012 சனவரி 01 ஆம் திகதியில் நிலவிய ரூபா 3,383,157 தொகையான சபைக்குப் பெறவேண்டியதாகக் காணப்பட்ட தொகையில் எவ்வித தொகையும் அறவிடப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிராததுடன் மொத்த தொகையும் கணக்கிணக்கக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 195,442 தொகையான ஊழியர் கடன் மீதியில் ரூபா 91,053 தொகையான கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விபரங்களை உறுதிப்படுத்துவதற்காக உரிய சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் அவற்றை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்துவதற்கு முடியாதிருந்தது.

| | கொடுக்கல்வாங்கல்கள் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (1) | சம்பளங்கள், மேலதிக நேரம் மற்றும் சில்லறைக் காசுச் செலவினம் | 133,310 | கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் |
| (2) | நானாவித செலவினங்கள் | 433,393 | கொடுப்பனவுகளுக்கு உரித்தான சிட்டைகள் |

## 2. நிதி மீளாய்வு

### நிதி விளைவுகள்

மீளாய்வாண்டில் சபையின் கலைப்பின் முடிவில் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தீர்ப்பனவின் பின்னர் ரூபா 15,325,992 தொகையான நட்டம் நேர்ந்திருந்ததுடன் இது திரண்ட நிதிக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சொத்துக்களைக் கையளித்தல்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையில் காணப்பட்ட ரூபா 38,074,620 பெறுமதியான சகல நிலையான சொத்துக்களும் நிதிக்கூற்றுக்களில் காணப்பட்ட தேறிய பெறுமதிக்கு சில அரசாங்க நிறுவகங்களிற்கு கையளிக்கப்பட்டிருந்தன.

### 3.2 கலைத்தல் நடவடிக்கைகளைப் பூர்த்திசெய்தல்

சகல சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தீர்க்கப்பட்டதை அடுத்து மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்கு உரித்தான வங்கிக் கணக்குகள் இரண்டிலும் ரூபா 29,246,995 தொகையான சாதகமான மீதி நிலவியதுடன் இது 2013 ஒக்டோபர் மாதம் பிரதி திறைசேரிச் செயலாளரின் கணக்கு இல. 2422267 இற்குச் செலவு வைக்கப்பட்டு வங்கிக் கணக்குகளை மூடிவிடுமாறு வங்கிக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருந்தன.